★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam:Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 12உ வியாழன் (27—9—56) ★ ★ வெளியூர்: புரட்டாசி 13உ வெள்ளி (28—9—56) [இதழ் 93

சென்னைக்கு அரிசி ஏற்றிக் கொண்டு வந்த கப்பல்

அந்தமானுக்கு அருகில் கரை தட்டிவிட்டதாம்

பர்மாவிலிருந்து 1,000 டன் அரிசி ஏற்றிக்கொண்டு சென்னை வந்து கொண்டிருந்த 'ஜலகன்யா' கப்பல், வட அந்தமானுக்கு அருகில் கரை தட்டிவிட்டதாம்; எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கும் என்பது அதிகாரபூர்வமாகத் தெரியவில்லையாம்.

'மிகச் சிறந்தது சேலம் பாக்சைட்'

'இந்திய பாக்சைட் அனைத்திலும் அது உயர்ந்தது'

'அலுமினியத் தொழிற்சாலைக்கு மேட்டூர் மின்சாரம் தருவதில் சங்கடமில்லை'

'குறைந்த உற்பத்திச் செலவினால் உலக விலையுடன் நாம் போட்டியிட முடியும்'

சேர்வராயன் மலைப் பகுதி பாக்சைட், அலுமினியத் தொழில் குறித்து டால்மியா அதிகாரி

திருச்சி, செப். 26—

"சேர்வராயன் மலைப்பகுதியில் கிடைக்கும் பாக்சைட், அலுமினியம் செய்வதற்கு மிகச் சிறந்ததாகும்."

"இந்தியாவின் பல பகுதிகளிலும் கிடைக்கும் பாக்சைட்டில் இருப்பதைக் காட்டிலும், சேர்வராயன் மலைப்பகுதியில் கிடைக்கும் பாக்சைட்டில் அலுமினியச் சத்து குறைவாக இருந்த போதிலும், மற்றவற்றைவிட சேர்வராயன் பாக்சைட்டே உயர்ந்ததாகும்."

சேலம் மாவட்டத்தில் இருக்கும் பாக்சைட் பற்றிய இக்கருத்தை, டால்மியா சிமெண்டுத் தொழிற்சாலையின் நிர்வாகியாக இருந்துவரும் ஆர். என். இராய் என்பார் மேற்கண்டவாறு சிறப்பித்துக் கூறியுள்ளார்.

திருச்சி எஞ்சினீயர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மேற்படி அதிகாரி, அலுமினியத் தொழில் குறித்துப் பேசினார். அவர் தமது பேச்சில் தொடர்ந்து கூறி இருப்பதாவது:—

"இன்று, இந்தியாவில் 7,000 டன் வரை அலுமினியப் பொருட்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. அவற்றில் அதிக சதவிகித அலுமினியம் பீகார் ராஞ்சி மாவட்டத்தில் மூரி என்ற ஊரில் தொழில் பட்டுவரும் இந்திய அலுமினியத் தொழிற்சாலையிலும், மீதமுள்ளவை மேற்கு வங்கத் தொழிற்சாலையிலும் உற்பத்திச் செய்யப்பட்டுவருகின்றன.

"சேர்வராயன் பாக்சைட்டைக் கொண்டு அலுமினியம் உற்பத்திச் செய்யப்படுமானால், அதன் குறைந்த உற்பத்திச் செலவின் காரணமாக, அகில உலக அலுமினியத்தின் விலையுடன் நம்மால் போட்டியிடுவது சாத்தியமாகும்.

"ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன் அலுமினியத்தை உற்பத்திச் செய்யக் கூடிய தொழிற்சாலை ஒன்றை இராகுட்டில் துவங்குவது என இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியப் பேரரசு தீர்மானித்து இருக்கிறது.

"சேர்வராயன் பாக்சைட் உற்பத்தி நிறுவனத்தின் மதிப்பீடான அறுபது இலட்சம் டன் பாக்சைட் இரும்பை உறுதி செய்யும் வகையில், அப்பகுதியில் பாக்சைட் படிந்துள்ள அளவைக் கண்டறிய சென்னை அரசாங்கம் குழிதோண்டும் பணியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளது.

"முதல் கட்டமாக ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன் அலுமினியம் உற்பத்திக்கு, மேட்டூர் அணையிலிருந்து 30,000 கிலோவாட் மின்சாரத்தை உதவுவதில் சென்னை அரசாங்கத்திற்கு எந்தவித சங்கடமும் இருப்பதற்கும் நியாயமில்லை.

"பாத்திரங்களைச் செய்வதைத் தவிர்த்து வேறு இனங்களுக்கு இப்பொழுது இந்தியாவில் அலுமினியம் தொழில்படுத்தப்படுவதில்லை. மின்சாரத்தை வெகு தொலைவுக்குக் கொண்டுசெல்லும் ஏ.சி.எஸ்.ஆர். கம்பிகளை உற்பத்திச் செய்வது பெருவழக்காகும்.

"விமான உற்பத்திக்குத் தேவைப்படும் அலுமினியம், அலுமினிய அலாய் உற்பத்தியில் கருத்துச் செலுத்துவது நன்மையானதாகும்."

'இறுதிவரையில் விடமாட்டோம்'

பரம்பிக்குளம் திட்டம்பற்றி மராமத்து அமைச்சர்

சென்னை, செப். 26—

"பரம்பிக்குளம் திட்டம் நமக்கு அவசியமானது — உதவக்கூடியது என்பதை உணருவோம். இது விஷயமாக மத்திய சர்க்காரிடமும், திட்டக் குழுவிடமும் வற்புறுத்தியாகிவிட்டது. இறுதிவரை விடமாட்டோம்' என்று மராமத்து இலாகா அமைச்சர் இராமநாதபுரம் இராசா சட்டசபையில் கூறியுள்ளார்

சென்னையில் தண்ணீர்

பஞ்சத்தைத்தவிர்க்க முயற்சி

ஆரணியாற்றிலிருந்து பெருமளவு தண்ணீர்?

சென்னை, செப். 26—

சென்னை நகரத்தில் குடித்தண்ணீர் பஞ்சம் ஏற்படாமலிருக்க ஆரணியாற்றிலிருந்து பெரும் அளவுத் தண்ணீரைப் புழலேரிக்குக் கொண்டுவரும் திட்டமொன்று உருவாக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் சென்னை சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

உள்ளனர் என்பது குறித்தும் கொலையில் சம்பந்தம் இருக்கும் என்று கிடைத்திருக்கிற தகவல்களைக் கொண்டு போலீஸ் சந்தேகம் கொண்டிருக்கும் 6 பேர் குறித்து, மேற்கொண்டு தகவல்கள் தேடும் வேலை நடைபெற்று வருவதாகத் தெரிகிறது என்றும், டிரங் டெலிபோன் மூலம் அறிவித்திருக்கிறார்.

தூத்துக்குடி நிலைமை

(டிரங் டெலிபோன் செய்தி)

சென்னை, செப். 27—

இன்று, தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜோசப், கே. வி. கே. சாமி கொலை சம்பந்தமாக மேற்கொண்டு வேறு யாரும் இன்னமும் கைது செய்யப்படாதது பற்றி பொது மக்கள் மிகுந்த கவலையுடன்

(1-ம் கலம் பார்க்க)

கே. வி. கே. சாமி மறைவு:

இரங்கற் செய்திகள்

★

அண்ணா

நமது அருமைத் தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் பிரிவு நமக்கெல்லாம் தாங்க முடியாத பெருந் துயரத்தை உண்டாக்கியிருக்கிறது. சாமி படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி கேட்டதிலிருந்து நான் படும் வேதனையை என் வாழ்நாளில் இதுவரை அடைந்ததில்லை

தமிழகம் சிறந்த ஊழியர் ஒருவரைப் பறிகொடுத்தது— நெல்லை மாவட்டம் தனது ஒளியை இழந்தது — தூத்துக்குடி தனது தனயனைப் பறிகொடுத்தது — கழகத் தோழர்களோ, 'நல்ல காவலனை இழந்தோமே' என்று துடிதுடிக்கின்றனர்.

அருமைத் தம்பி சாமியை, பாதகர்கள் படுகொலை செய்ததால் நாடே துக்கத்திலாழ்ந்திருக்கிறது. இவ்விதக் கொடுமையைச் செய்த கயவர்கள் நம் கழகத்திற்கும், நமக்கும் மட்டும் துரோகத்தைச் செய்தவர்களல்ல — திராவிடத்திற்கே—மனித சமுதாயத்திற்கே பெருங்கேட்டினை விளைவித்திருக்கின்றனர்! இந்தக் கல் நெஞ்சக்காரர்கள் காணப்போகும் பலன்தான் என்ன?

செயல் வீரன் சாமியின் கோரக் கொலையால், கழகத் தோழர்கள் தீராத்துயரத்தில் ஆழ்ந்திருப்பீர்கள் என்பதை நான் அறியாதவனல்ல; கழகத் தோழர்கள் கடிதம்-தந்தி மூலமும், நேரிலும் துடிதுடிப்புடன் கேட்கும் விவரங்களிலிருந்து இதை உணருகிறேன். உணருவதுமட்டுமல்ல; அந்த நேரங்களில நான் மேலும் மன அதிர்ச்சியடைகிறேன்.

தோழர் சாமி படுகொலை செய்யப்பட்ட செய்தி அறிந்ததும் நமது பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் தூத்துக்குடிக்கு விரைந்தோடி, அக்கடமை வீரனுக்குக் கழகச் சார்பில் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்கினார்; இறுதி வணக்கத்தையும் செலுத்தினார்; கழகத் தோழர்களுக்கும் பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்து ஆறுதல் கூறிவந்திருக்கிறார்.

கழகத் தோழர்களாகிய நீங்களெல்லாம் அமைதி குலையாமலும் ஆத்திரப்படாமலும் நமது சாமியின் ஆற்றலையும், உண்மையான தொண்டினையும், கழக வளர்ச்சியில் அவர் கடைப்பிடித்து வந்த கட்டுப்பாட்டினையும் எண்ணியெண்ணி மனதுக்குள் வேதனைப்பட்டு வருவதை உணரும்போது என் நெஞ்சம் மேலும் மேலும் குமுறுகிறது.

தூத்துக்குடியிலுள்ள கழகத் தோழர்களையும் மற்ற நண்பர்களையும் சந்தித்து அவர்களின் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளவும், தம்பி சாமிக்கு இறுதிக் காணிக்கையைச் செலுத்தவும் 30—9—56 ஞாயிறன்று, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுடனும், மற்றத் தோழர்களுடனும் தூத்துக்குடிக்கு வருகிறேன்; உங்களையெல்லாம் சந்திக்கின்றேன்.

தம்பி சாமியை இழந்து பெருந்துயரத்தில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★

என். வி. நடராசன்

எனது, ஆருயிர்த் தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் மறைவுச் செய்திகேட்டுத் திடுக்கிட்டேன்; நிலைதடுமாறினேன்; செயலற்றுப்போனேன். சகாத் தோழர் சாமி அவர்கள் என்னுடன் சேர்ந்து ஆற்றிய இயக்கப் பணிகளில் சிலவற்றை எண்ணியெண்ணிப் பெரிதும் வருந்தினேன்; கண் கலங்கினேன்.

உழைப்பே உருவாய் அமைந்தவர்; கழகப் பணியே தான் காணும் இன்பம் என்ற உள்ளம படைத்தவர்; கழக வளர்ச்சியில் தனது எண்ணத்தைத் தெரிவிக்கும்போது அளவுகடந்து தீவிரம காட்டுவார்; ஆனால் முடிவுக்கு அவர் காட்டும மரியாதையும், கட்டுப்பாடும், செயலாற்றுந் தன்மையும் மறக்க முடியாததாகும்.

இவ்வித ஆற்றலால், அருந்தொண்டினால் பிரகாசித்து வந்த தென்பாண்டியத்தின் திகு விளக்கை அணைத்துவிட்டனர் பாதகர்கள்!

சாமியின் உயிரைத்தான் அக்கயவர்கள் குடிக்க முடிந்ததேயன்றி, அவரின் இணையற்றத் தொண்டின் சிறப்பை எவராலும் அழிக்கமுடியாது. அந்த ஆறுதலுடன், அமைதியுடன் அவர் விட்டுச்சென்ற பணியை முடிப்போம்.

தோழர் சாமியின் பிரிவு கழகத்திற்கு மட்டுமல்ல—தமிழகத்திற்கே ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். அதுபோலவே, இக்குலவிளக்கை இழந்துத் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாடு
தினசரி இதழ்
சென்னை 27—9—'56 வியாழன்

பிரிட்டனின் வீழ்ச்சி!

சூயசுச் சிக்கலை அடிப்படையாகக்கொண்டு மூன்றுவது உலகப் பெரும் போர் மூண்டுவிடுமோ என்ற அச்சம் பலமாக இருந்துவந்தது. அந்த அச்சத்தை உறுதி செய்யும் வகையில், பிரிட்டிஷ் இராணுவ நடமாட்டமும் மத்தியதரைக் கடல் பகுதியில் விரிவடைந்தது.

மூட்டிய அச்சத்தைத் தவிர்க்கும் வகையில், இப்பொழுது பிரிட்டனின் போக்கில் மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது. அந்த மாறுதலைக்கொண்டு நிலைமையை வரையறுத்துக் கூற வேண்டுமானால், சமாதானமான முறையில் சூயசுச் சிக்கலுக்குப் பரிகாரம் காணுவது சாத்தியம் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது என்றுதான் கூற வேண்டும்.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் செய்துகொண்ட ஒப்பந்த விதிகளை மீறும் தன்மையில், சூயசுக்கால்வாயை தேசியமயமாக்குவதின் மூலம் எகிப்து நடந்துகொண்டிருக்கிறது எனத் துவக்கத்தில் பிரிட்டனும், பிரான்சும், அமெரிக்காவும் ஆர்ப்பரித்தன. எகிப்தை மிரட்டி, தங்கள் கருத்துக்குப் பணிய வைத்துவிட மேற்படி மூன்று நாடுகளும் போர்முழக்கம் செய்தன.

தனது நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு தொழில் நிறுவனத்தை, நஷ்ட ஈடு கொடுத்துவிட்டுத் தனது விருப்பப்படி தேசிய மயமாக்குவதற்கு எகிப்து நாட்டுக்கு உரிமை இருக்கிறது என்பது எவரும் எற்கத்தக்க உண்மையாகும். இந்த உண்மையை, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் வேண்டா வெறுப்பாகவாவது ஏற்றுக்கொண்ட போதிலும், சூயசுக் கால்வாயின் பயனையும், அப்பயனுக்குள்ள அகில உலக முக்கியத்துவத்தையும் காட்டி, எகிப்தின் தேசியமயக் கோட்பாட்டை எதிர்க்கத் தொடங்கின.

ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் ஏற்படுகின்ற பிணக்கைத் தீர்த்து வைக்கக் கூடிய பொது அமைப்பு எதுவும் நிறுவப்பட்டு இல்லாதது போலவே, ஐக்கிய நாட்டுச் சபை அமைப்பை அலட்சியப்படுத்திவிட்டு, எகிப்தை மிரட்டிப் பணியவைக்க, மேற்குறிப்பிட்ட மூன்று நாடுகளும், விரும்பத்தகாததும் வெறுக்கத்தக்கதுமான போர் நடவடிக்கைகளில் ஈடுபடலாயின. மேற்படி நாடுகளின் அச்சுறுத்தல் எந்த அளவு விரிவாயிற்றோ, அதற்குத் துளியும் குறையாத அளவில் எகிப்து நாட்டின் உறுதிப்பாடும் உரம்பெற்று வந்தது.

சூயசுக்கால்வாயைப் பயன்படுத்துவோர் அமைப்பு என்ற பெயரால், என்றும்போல் தங்கள் நிர்வாகத்தின்கீழ் சூயசுக் கால்வாயைக் கொண்டு வர மேற்படி மூன்று நாடுகளும் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கின.

எண்ணத்திற்குப் புதிய பெயர் சூட்டப்பட்டிருப்பதைத் தவிர்த்து, எகிப்து நாட்டின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் முன்னாள் கருத்தில் கடுகளவு மாற்றமும் புதிய ஏற்பாட்டில் இல்லாதிருப்பதைக் கண்ட எகிப்து, எட்டிக்குப் போட்டியாக நடந்துகொள்ள முன்வந்தது.

இவ்வளவுக்குப் பிறகு, ஐக்கிய நாடு சபை என்ற பொது அமைப்புக்குப் பிரச்சினையைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நினைப்பு, இப்பொழுது பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் ஏற்பட்டு இருக்கிறது. இந்த நினைப்பு ஏற்கனவே அவ்விரு நாடுகளுக்கும் இருந்திருக்க வேண்டும்; அதுதான் முறையாகும்.

சூயசுப் பிரச்சினையை ஐக்கிய நாடு பாதுகாப்பு அவைக்கு இங்கிலாந்தும் பிரான்சும் கொண்டுபோயிருக்கிறது; அது பற்றி விவாதிக்க நாளும் குறிப்பிட்டாகிவிட்டது.

அதுபோன்றே, சூயசுக்கால் வாய் நிறுவனம் தேசிய மயமாக்கப்பட்டதும், இங்கிலாந்தும் பிரான்சும் எகிப்தை அச்சுறுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள், ஐக்கிய நாடு அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணானது என்றும், உலக அமைதியைக் குலைக்கக்கூடியது என்றும் காரணங்காட்டி, அதை ஆராய வேண்டுமென்ற ஒரு வேண்டுகோள், ஐக்கிய நாடு பாதுகாப்புச் சபைக்கு எகிப்து நாட்டின் சார்பில் விண்ணப்பிக்கப்பட்டு இருக்கிறது. இம்முயற்சிக்கு ஆதரவு காட்டி, பாதுகாப்புச்சபையில் வாய்ப்போர் தொடுக்கத் தான் தயாராக இருப்பதாக சோவியத் நாடு வேறு அறிவித்திருக்கிறது.

எகிப்துநாட்டிற்குப் பக்கபலமாக இருக்கும் சோவியத் நாடு, பிரிட்டன், பிரான்சின் கோரிக்கையைத் தூக்கி எறிய ஐக்கிய நாடு பாதுகாப்புச் சபையில், தனக்குள்ள தூக்கி எறியும் பிறப்புரிமையைப் பயன்படுத்தப் போவதாகவும் அந்த நாடு அறிவித்துள்ளது. அதன் விளைவு சூயசுச் சிக்கலைத் தீர்க்க உதவுமா என்பது ஐயத்திற்குரியதாகும்.

சூயசு விவகாரத்தில் சிக்கல் எதுவுமில்லை. சூயசுக் கால்வாய் நிறுவனத்தைத தேசிய மயமாக்கும் உரிமை எகிப்து நாட்டுக்கு இயல்பாக உண்டு என்ற அடிப்படையை, தேசிய மயமாக்கப்பட்ட நேரத்திலேயே ஒப்புக்கொண்டு, சூயசுக் கால்வாய் போக்குவரத்தைக் குறித்து மட்டும் ஒரு புதிய முறையை உருவாக்க எகிப்துடன் கலந்து செயல்பட பிரிட்டனும் பிரான்சும் அப்பொழுதே முயன்று இருக்குமானால், சூயசு பற்றி எழுந்துள்ள சிக்கல் எதுவும் எழுவதற்கே இடமில்லாது போயிருக்கும். எகிப்து மக்களுக்குப் பிரிட்டன்மீது வளர்ந்துள்ள கசப்புக்கும் இடமிருந்திருக்காது.

எகிப்து மீது பிரிட்டன் காட்டிய மனோபாவத்தின் விளைவாக மத்திய தரைக்கடல் பகுதி முழுமீம் நாடுகளில் பிரிட்டனின் மதிப்பு சரிந்து போயிருப்பதைப் போன்ற அவல நிலை உருவாவதற்கும் வாய்ப்பே கிடைத்திருக்காது. ஆப்பதனை அசைத்துவிட்டக் குரங்கதுபோல் அல்லல்படவேண்டிய நிலை தனக்கு ஏற்பட்டு இருப்பதற்கு முழுதும் பொறுப்பு ஏற்க வேண்டியது இங்கிலாந்தேயாகும் எனக் கூறுவது மிகையாகாது. பிரிட்டனுக்கு இழைக்கப்பட்டுள்ள மன மாற்றத்தை, பெருத்ததோர் அகிலல் வீழ்ச்சி என்றுதான் கொள்ளவேண்டும்.

கைத்தறிகளை பதிவு செய்வதற்கு காரணம் என்ன?

அமைச்சர் தரும் விளக்கம்

சென்னை, செப். 25—

கைத்தறி சௌவானர்களின் தனிப்பட்ட நிலைமையை முன்னிட்டு கைத்தறி சௌவுத் கட்டுப்பாடு உத்தரவை, அனுதாபத்துடன் அமுல் நடத்துமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதாம்.

சௌவானர்களைக் குடியமைப்பு செய்வதற்கான தகவல்களை சேகரிக்கவே தறிகள் பதிவு செய்யப்படுவதாகவும், இந்த மாதிலத்திற்குக் கைத்தறிகளை ஒதுக்கித் தருவதற்காக இவை பதிவு செய்யப்படவில்லை என்றும், கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் கூறியுள்ளார்.

'தறிகள் சம்பந்தமான புதிய சொன்னையை மத்திய சர்க்கார் அறிவிப்பதற்கு முன்னால் சென்னை சர்க்காருடன் கலந்தாலோசிக்கவில்லை" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

முத்துச்சிப்பியிலிருந்து பயன்மிக்க பொருள்கள்

தயாரிக்க சென்னை சர்க்கார் முயற்சி செய்கிறதாம்

சென்னை, செப். 25—

"முத்துச் சிப்பிகளிலிருந்து பொத்தான்களும், மற்ற உபயோகப் பொருட்களும் தயாரிக்கலாம்; இந்தத் தொழிலில் வெகுவாக முன்னேறியுள்ள பீகார் மாநிலத்திடம் முழு விவரம் கேட்கப்பட்டுள்ளது" என்று அமைச்சர் பக்தவத்சலம் மேல்சபையில் கூறியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் கீழ்க் கரையில் தனிப்பட்டவர் துறையில் சங்கு வெட்டுவதை புதுப்பிப்பதற்கான திட்டத்தை சென்னை அரசாங்கம் யோசித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்து பயிற்சியளிக்க 10 மேலக்காரர்களையோ அல்லது ஒரு பயிற்சியாளரையோ அனுப்பும்படி அகில இந்தியக் கைத்தொழில் போர்டுக்கு எழுதியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

புதுவை மாநிலத்தில் கல்விச் சலுகை

புதுச்சேரி, செப். 24—

புதுவை மாநிலத்திலுள்ள எல்லா அரசாங்க ஆங்கிலப் பள்ளி மாணவர்களுக்கும் 1956 அக்டோபர் 1-ந் தேதியிலிருந்து இரண்டாவது படிவம் வரை கட்டணத்தில் முழு விதிவிலக்கு அளித்து சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

இந்தியச் செருப்புகள் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி

புதுடில்லி, செப். 25—

ரஷ்யாவுடன் இந்திய வர்த்தக ஒப்பந்தம் ரூ. 8 கோடி மதிப்புள்ள ஏற்றுமதிக்கும், ரூ. 7 கோடி மதிப்புள்ள இறக்குமதிக்கும் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தப்படி ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள செருப்புகள் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுமென்று தெரிகிறது.

தமிழ் நாட்டின் கலை நுணுக்கம்

அமெரிக்க மக்களைக் கவர்ந்துள்ளதாம்

நியூயார்க், செப். 23—

அமெரிக்காவில் இப்போது சென்னையின் பெயர் பெரிய அளவில் அடிபட ஆரம்பித்திருக்கிறதாம்.

அமெரிக்காவிலுள்ள எல்லாத் துணிக் கடைகளிலும், 'ஆண்கள் போட்டுக்கொள்வதற்கான ஆடைகளைத் தைப்பதற்கு சென்னைத் துணிகளை மிக உயர்ந்த ரகமானவை,' என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறதாம்.

ஒரு கடையில் தொங்கவிடப்பட்டுள்ள பலகையில், 'உண்மையான—மிக உயர்ந்த ரக சென்னை தறித் துணிகள்—இந்தியாவின் பண்டைக்காலக் கலை நுணுக்கங்களின் நிறமையை வெளிப்படுத்தும் கலா நிபுணர்களால் தயாரிக்கப்பட்டவை' என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறதாம்!

மற்றொரு கடையில், 'தறி செய்யும் தொழில் கலையில் உள்ள நிறமை அனைத்தையும் வெளிப்படுத்தும் சென்னைத் துணிகள்' என்று எழுதப்பட்டிருக்கிறதாம்!

ரூ.46,41,000 செலவில் குடிசைத் தொழில் ரீதியில் சோப்பு தயாரிப்பு

புதுடில்லி, செப். 23—

குடிசைத் தொழில் ரீதியில் நடக்கும் சோப்புத் தயாரிப்பில் 4,000 பேருக்கு முழு நேர வேலை அளிக்கவும், இலட்சம் பேருக்கு வருடத்தில் இரண்டு மாத வேலை அளிக்கவுமான திட்டமொன்றை இந்திய அரசாங்கம் அங்கீகரித்திருக்கின்றது. இதற்காக ரூ. 46,41,000 இந்திய கதர்—குடிசைத் தொழில் போர்டுக்கு உதவியளிக்கப்படுமென்று தெரிகிறது.

புதுவகை சணல் அறுவடை இயந்திரம்!

கீவ் நகரிலுள்ள ரஷ்ய மெண்மரப் பயிர்கள் ஆராய்ச்சிக் கழகம் ஒரு புதிய வகை சணல் அறுவடை இயந்திரத்தை உருவாக்கியுள்ளது. இந்த இயந்திரம் சணலை அறுப்பது முதல், அவற்றை நன்கு அடித்து சுத்தப்படுத்தி, கட்டு கட்டாகக் கட்டிப் போடுவதுவரை சகல வேலைகளையும் நிர்வகிக்கிறது. மேலும் இக்கழகம், ஒரு புதிய வகை சணல்-ஸ்குட்சர் இயந்திரத்தையும், கயிறு பின்னும் இயந்திரத்தையும் உருவாக்கியுள்ளது.

நகரத்திற்கே ஆபத்து!

டோக்கியோ, செப். 23—

கல்லும், மண்ணும், மரமும் கலந்து மலைச்சரிவு உண்டாகி வருவதால் தென் ஜப்பான் பகுதியில் சஜிஹாரா நகரத்திற்கே ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

போலீஸ் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இணங்கி இதுவரை 5,000 பேர் நகரத்தைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றும், மேலும் பலர் வெளியேறி வருவதாகவும் கூறப்படுகிறது.

கடலுக்குள் நகரம்

மாஸ்கோ, செப். 25—

தண்ணீருக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரு ரஷ்யர்கள் ஒரு பெரிய சலவைக் கல்லை கண்டெடுத்தனராம். அதில் கிரேக்க ஆடை அணிந்த ஒரு பெண்ணின் உருவம் இருந்ததாம். அதைக் கொண்டு கருங்கடலில் மூழ்கிக் கிடக்கும் ஒரு கிரேக்க நகரத்தை சோவியத் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த நகரம் 2,500 ஆண்டுகளுக்கு முன் பயோ சொனர் அருகில் நிர்மாணிக்கப்பட்டதாம்! மேலும் அந்த நகரம் வாணிபத்திற்கு முக்கியமான இடமாக விளங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது.

கல்கத்தாவிலிருந்து கொச்சிக்குக் கால்வாய்

புதுடில்லி, செப். 25—

கிழக்குக் கரையிலுள்ள கல்கத்தா துறைமுகத்தையும், மேற்குக் கரையில் கொச்சி துறைமுகத்தையும் நதிக்கால்வாய்கள் மூலம் இணைப்பதற்கான ஒரு மாபெரும் திட்டத்தை, இந்திய அரசாங்கத்தின் நதி மின்சாரக் குழு தயாரித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் ஒரிசா, ஆந்திரா, சென்னை ஆகிய மாகிலங்களில் உள்ள சில பெரிய ஆறுகள் பல கால்வாய்கள்மூலம் இணைக்கப்படும்.

இந்தியாவில் இப்பொழுது 36,000 மைல்கள் நீளமுள்ள இரயில்வே போக்கு-வரத்து இருக்கிறது; ஆனால், 5,760 மைல் நீளத்திற்கே கால்வாய் போக்கு-வரத்து இருக்கிறது. கங்கை, நர்மதை, தபதி போன்ற நதிகளும் போக்கு வரத்துக்குப் பயன்பட வேண்டுமென்று இந்தக் குழு கருதுகிறது.

இன்னும் மேற்குக் கரையில் இருந்து கிழக்குக் கரைவரை—பம்பாய், மத்தியப் பிரதேசம், ஆந்திரா ஆகிய மாகிலங்கள் வழியாக ஒரு தொடர்ச்சியான கால்வாய் பாதையையும் அமைக்க அத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது எனத் தெரியவருகிறது.

ஒலி வேகத்திற்கு மேல் இருக்கும் கார்க் கணவாய்

மணி ஒன்றுக்கு 3,700 மைல் வேகத்தில்—ஒலிவேகத்துக்கு மிகவும் அதிகமான வேகத்தில், வெட்பக் காற்று அடிக்கக் கூடிய கார்க் கணவாயை அமெரிக்காவிலுள்ள ஒஹியோ மாகில பல்கலைக்கழக எஞ்சினீயர்கள் தயாரிக்கின்றனர். வான மண்டல பிரயாணத்திற்குப் பெரும் தடங்கல்களாக இருப்பவைகளில் ஒன்றான வெப்பத்தைச் சமாளிக்க இது உதவும் என இதனை நிர்மாணம் செய்பவர்கள் நம்புகின்றனர்.

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி

சென்னைக்கு வருகை தருகிறார்

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமரும் இங்கிலாந்தின் தொழிற்கட்சிப் பிரமுகருமான அட்லி அவர்கள் அக்டோபர் 15-ந் தேதியன்று சென்னைக்கு வருகை தருகிறார்; ஒரு வாரத்திற்கு அவர் இங்கு தங்கியிருந்து பல 'அலுவல்'களில் பங்கு பெறுவார் என்றும் தெரியவருகிறது.

இரயில்வே நிர்வாகம்

'திசைக்கு ஒருவர் விதம் எட்டு மந்திரிகளை நியமிக்கலாம்'

"மந்திரிகள் பெருகினால், நிர்வாகம் சீர்திருந்தும் என்று சொல்ல முடியாது. நிர்வாகம் சரிவர நடப்பது பதவியில் உள்ள மனிதரின் தரத்தைப் பொறுத்தது.

"புதிய அமைப்பில் ஒரு இரயில்வே மந்திரிக்கு இரு துணை மந்திரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இரயில்வே நிர்வாகம் எந்த நிலையில் உள்ளது?

'புத்த காலத்திற்கு முன்பு இரயில்வே இலாகா திருட்டுப் போன பொருள்களுக்கு வருடம் ஐந்து இலட்சம் ரூபாய் நஷ்டஈடாகக் கொடுத்து வந்துள்ளது. தற்போது வருடம் மூன்று கோடி ரூபாய்க்கும் அதிகமான திருட்டுப்போன பொருள்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து வருகிறார்களாம்.

"இரயில்வே இலாகாவுக்கு மூன்று மந்திரிகள் போதாது; திசைக்கு ஒருவர்வீதம் எட்டு மந்திரிகளை நியமிக்கலாம். எட்டு பேரும் போதாதென்றால் பொதுப்படையாகத் 'திருட்டு ஒழிப்பு மந்திரி''விபத்துத் தடுப்பு மந்திரி' போன்றவர்களையும் நியமிக்கலாம்.

—21-9-56 'நவ இந்தியா'
இதழில் 'யு. ஜர்.'

மறைந்த யாவரின் கே. வி. கே. சாமிக்கு தோழர்களின் இறுதி மரியாதை

நாடெங்கிலுமுள்ள நமது கழகத் தோழர்களும் அனுதாபிகளும் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நிறைவேற்றிய தீர்மானங்கள் முதலியன இங்கு சுருக்கித்தரப்பட்டுள்ளன :—

உசிலம்பட்டி :

ஊரில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப்பட்டன. 22-ந் தேதியன்று கழகத் தோழர்கள் அனைவரும் கடைகளை அடைத்து இரு தினங்களாகக் கருப்புக் கொடி அணிந்து துக்கம் கொண்டாடினர். 23-ந் தேதி காலை 10 மணிக்கு, மௌன ஊர்வலம் நடைபெற்று சந்தைத் திடலை அடைந்து ஊராட்சி மன்றத் தலைவர் சௌந்திரபாண்டியன் தலைமையில் அனுதாபக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அம்மாப்பேட்டை :

22-9-56-ல் தோழர் சாமி அவர்கள் காலை செய்யப்பட்ட செய்தியைத் தண்டுப் பிரசுரங்கள் மூலம் அச்சிட்டுத் தெரிவிக்கப்பட்டது. தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னம் அணிந்தனர். கழகக் கட்டிடத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வட கோவை :

22-9-56 மாலை 6 மணிக்கு, தோழர் எம். கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மன்னர்குடி :

கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப்பட்டன தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னங்கள் அணிந்தனர். தோழர் கே. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொள்ளாச்சி :

22-9-56 அன்று நகரில் எல்லா கழகக் கொடிகளும் தாழப் பறக்கவிடப்பட்டன தோழர்கள் கருப்புச் சின்னம் அணிந்து தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தினர். அனுதாப ஊர்வலமும் நடைபெற்றது. ஊர்வலத்தில் பொள்ளாச்சி, கோட்டாம்பட்டி, சூளேசுவரன் பட்டி இளைஞர் கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர். கழக அலுவலகத்தில் ஊர்வலம் முடிவுற்றதும் நடைபெற்ற கூட்டத்தில் அனுதாபத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது

இராசபாளையம் :

22-9-56 காலை 11 மணிக்கு, தோழர் முத்துசாமி தலைமையில் அவசரச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. 5 நிமிட நேரம் மவுனம் மேற்கொள்ளப்பட்டு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. தந்திமூலம் தோழர் சாமி அவர்கள் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப் பட்டது.

கொடுமுடி :

22—9—56ல் நடைபெற்ற இளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

பனைமடல் :

22—9—56 காலை 11 மணிக்கு, கொடிகள் தாழப் பறக்கவிடப்பட்டன. அனுதாப ஊர்வலம் நடைபெற்ற பின்னர் கூட்டம் கூட்டி, அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

திருவண்ணாமலை:

23-9-56-ல் இளைக் கழகத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தின்போது அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சேந்தமங்கலம்:

22-9-56 பகல் 3 மணிக்கு சேந்தமங்கலம் தாலுகாவைச் சேர்ந்த தி. மு. கழகக் இளைஞர்களின் செயலாளர்களடங்கியக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. 2 நிமிடநேரம் அமைதியாக எழுந்து நின்றனர்.

திருத்துறைப்பூண்டி :

23-9-56 காலை 9 மணிக்கு, கழகத் தோழர்கள் கருப்புச் சின்னம் அணிந்து மௌன ஊர்வலம் வந்தனர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேராவூரணி :

22—9—56ல், நகரில் கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப்பட்டன. தோழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு மௌன ஊர்வலமாக வந்து, இறுதியில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றினர்.

குருவிக்கரம்பை:

22-9-56-ல் அனுதாப ஊர்வலம் மௌனமாக நடைபெற்றது. அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

விருதுநகர் :

21—9—56-ல், கழகக் கொடிகள் அனைத்தும் தாழப் பறக்கவிடப்பட்டன. 23-ந்தேதி காலை 10—மணிக்கு நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்திலிருந்து மவுன ஊர்வலம் புறப்பட்டு, மீண்டும் அங்கு அடைந்ததும் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. ஒரு நிமிட நேரம் மவுனமாக இருந்து அனுதாபம் தெரிவித்துக் கொள்ளபட்டது.

சேலூர் :

தி. மு. கழகக் இளையில் பறந்து கொண்டிருந்த கொடி தாழப் பறக்கவிடப்பட்டது. தோழர்கள் அனைவரும் கூடி அனுதாபக் கூட்டம் நடத்தித் தீர்மானமும் நிறை வேற்றினர்.

திருமங்கலம் :

22-9-56 இரவு 10 மணிக்கு 'மதி' நிலையத்தில் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது. 5 நிமிட நேரம் எழுந்து நின்று மரியாதை செலுத்தப்பட்டு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

பண்ணைக்காடு :

22—9—56-ல் கழகத் தோழர்கள் அனைவரும் தங்கள் கடைகளையெல்லாம் மூடி, வேலைக்குச் செல்லாமல், துக்கம் மேற்கொண்டனர். அன்றிரவு நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

குணியமுத்தூர் :

பஞ்சாலைத் தொழிலாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கருப்புச் சின்னம் அணிந்தனர். ஆலைத் தொழிலாளர்கள் அனைவரும் பகலில் வேலைக்குச் செல்லவில்லை. கழகப் பணிமனையில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடியினை, முன்னாள் செயலாளரின் தலைமையார் பாதிக் கம்பத்தில் பறக்கவிட்டபோது கூடியிருந்த தோழர்கள் அனைவரும் கண்ணீர் வடித்துத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர்.

கவுந்தப்பாடி :

22—9—56 காலை நகரில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடிகள் எல்லாம் பாதிக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

பல்லடம் :

21—9—56 மாலை, நகரில் பறந்து கொண்டிருந்த கொடிகள் எல்லாம் தாழப் பறக்கவிடப்பட்டன. மறுநாள் மாலை கழகக் கொடிகள், கருப்புக் கொடிகளுடன் மௌன ஊர்வலம் நடைபெற்றது. தோழர்கள் கருப்புச் சின்னம் அணிந்திருந்தனர். தி. மு கழக அலுவலகமுன் நடைபெற்ற கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புளியங்குடி :

23—9—56 இரவு 9-மணிக்கு, தோழர் எஸ். தாமஸ் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுஉறுப்பினர்கள் கூட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மூணியாம்பூண்டி :

22—9—56 இரவு 7½மணி அளவில் நடைபெற்றச் செயற்குழுக் கூட்டத்தில், இரண்டு நிமிடநேரம் எழுந்து மவுனமாக நின்று மரியாதை தெரிவித்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

தாண்டாணூர் :

22—9—56 காலை 11-மணிக்குக் கழகக் கட்டிடத்தில் அனுதாபக் கூட்டம் நடைபெற்று அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. கழகக் கொடி தாழ இறக்கிப் பறக்கவிடப்பட்டது.

கண்ணமூச்சி :

23—9—56 மாலை, தோழர் சின்னப்பன் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அனைவரும் எழுந்து மவுனமாக நின்று அனுதாபம் தெரிவித்துத் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

சூள்ளக்காடாளையம் :

தி. மு. கழகக் இளையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தண்டராம்பட்டு :

23—9—56 மாலை நடைபெற்ற இளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

[illegible]

28—9—56ல், கழகக் கட்டிடத்தில் பறந்துகொண்டிருந்த கொடி பாதிக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து நின்று 5 நிமிட நேரம் மவுனமாக நின்று அனுதாபம் தெரிவித்துத் தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது.

தோட்டப்பாளையம் :

23—9—56 காலை 10 மணிக்கு இளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. ஒரு நிமிட நேரம் மவுனமாக இருந்து அனுதாபம் தெரிவித்துத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கடையம் :

22—9—56ல் நடைபெற்ற நிரவிட வாடு பிரிவினை கான் விழாக் கூட்டத்தில், தோழர் சாமி அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பரமக்குடி :

நகர் முழுமையிலும் கழகக் கொடிகள் பாதிக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. 25—9—56 மாலை கழகப் பணிமனையிலிருந்து மவுன ஊர்வலம் நடைபெற்றது. 6 மணியளவில் கழகம் முன் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

காளாப்பூர் :

22—9—56 மாலை கரில் நடையடைப்புச் செய்யப்பட்டு தோழர் பெரியய்யா தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. ஊரணிக் கரையில் நடைபெற்றக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கழகக் கொடிகள் தாழ இறக்கிப் பறக்கவிடப்பட்டன.

பொன்னேரி வட்ட தி. மு. கழகம் :

28—9—56ல் பொன்னேரி வட்டக் கழகச் சார்பில் தூணியில் நடைபெற்றத் நிரவிட வாடு பிரிவினை கான் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடம்பூர் :

21—9—56 காலை 5 மணிக்கு, செய்தி கேட்டதும், பறந்துகொண்டிருந்த கழகக் கொடிகள் எல்லாம் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. பல இடங்களில் செய்தியை அறிவிக்கும் வகையில் வினாபரத் தட்டிகளும், கருப்புக் கொடிகளும் வைக்கப்பட்டன. பகல் 11 மணிக்குக் கருப்புக் கொடிகளுடன் மவுன ஊர்வலம் நடைபெற்று அனுதாபம் தெரிவிக்கப் பட்டது.

ராப்ராய் :

24—9—56 மாலை 5½ மணிக்கு, கழகப் பணிமனையில் நடைபெற்றத் இளைக் கழகக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்த 3 நிமிட நேரம் மவுனம் மேற்கொள்ளப்பட்டுத் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

செம்மாண்டம்பாளையம் :

23—9—56ல் நடைபெற்றச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அம்மன்புரம் :

22—9—56 மாலை மவுன ஊர்வலம் நடைபெற்றது. கழகக் கொடிகள் பாதிக் கம்பத்தில் இறக்கிப் பறக்கவிடப்பட்டன. அனுதாபக் கூட்டம் நடைபெற்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

உதகை :

23—9—56 பகல் 2-மணிக்கு, நிரவிட வாடு விடுதலை கான் அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கழகக் கொடி பாதிக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கல்லூரணி :

22—9—56 இரவு 8-30 மணிக்கு பாண்டியனூர் படிப்பகத்தில் நடைபெற்றக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், இரண்டு நிமிடம் மௌனம் மேற்கொள்ளப்பட்டு அனுதாபம்தெரிவிக்கப்பட்டது.

தலைமை நிலையச் செய்தி :

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் அக்டோபர் திங்கள் 12-ம் நாளிலிருந்து 23-ம் நாள்வரை கீழ்க்கண்ட தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே சென்று தங்கியிருந்து, அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத்தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் அறிவார்கள்.

ஆய்வுக் குழு செல்லும் இடங்கள்:

அக்டோபர்		
12 :	காஞ்சிபுரம்	.... காலை 9 மணி
,,	வேலூர்	.... மாலை 6 ,,
13 :	திருப்பத்தூர்	.... காலை 9 ,,
,,	கிருஷ்ணகிரி	.... மாலை 6 ,,
14 :	சேலம்	.... காலை 9 ,,
,,	ஈரோடு	.... மாலை 6 ,,
15 :	கோயமுத்தூர்	.... காலை 9 ,,
,,	உடுமலைப்பேட்டை	.... மாலை 6 ,,
16 :	கரூர்	.... காலை 9 ,,
,,	திருச்சி	.... மாலை 6 ,,
17 :	திண்டுக்கல்	.... காலை 9 ,,
,,	பெரியகுளம்	.... மாலை 6 ,,

அக்டோபர்		
18 :	மதுரை	.... காலை 9 மணி
,,	விருதுநகர்	.... மாலை 6 ,,
19 :	திருநெல்வேலி	.... காலை 9 ,,
,,	நாகர்கோவில்	.... மாலை 6 ,,
20 :	குற்றாலம்	.... மாலை 6 ,,
21 :	காரைக்குடி	.... மாலை 6 ,,
22 :	பட்டுக்கோட்டை	.... காலை 9 ,,
,,	மாயவரம்	.... மாலை 6 ,,
23 :	கடலூர்	.... காலை 9 ,,

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக்கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

குறிப்பு :—தேர்தல் ஆய்வுக்குழு, திட்டமிட்டுள்ளபடி செல்லுமிடங்களில் தொடர்ந்து தன் பணியில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டியிருப்பதால், எந்த இடத்திலும் எக்காரணங்கொண்டும் பொதுக்கூட்டங்களோ, வேறு பொது நிகழ்ச்சிகளோ ஏற்பாடு செய்ய வேண்டாமென்று கிளைக் கழகத் தோழர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

புதிய மாநிலங்களுக்குக் கூட்டுக் கவர்னர்களை நியமிப்பதற்குக் கண்டனம்

ஆட்சியாளர் அலட்சியப்போக்கு கண்டு வருத்தம்

சென்னை மேல்சபையில் வி. வி. இராமசாமி

சென்னை, செப். 25—

சென்னை மேல் சபையில் அரசியல் சட்டத் திருத்த மசோதா வின்மீது பேசுகையில், தோழர் வி. வி. இராமசாமி குறிப்பிட்ட கருத்துக்கள்:—

"மாநிலங்களைப் புதிய முறையில் அமைக்கப்படுவதால் 'சென்னை மாநிலம்' என்றிருப்பது 'தமிழ் நாடு' என்று அழைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

"சென்னை அரசாங்கமோ மத்திய அரசாங்கமோ இதைக் குறித்து அலட்சியப் படுத்தியிருப்பது மிகவும் வருத்தத்தைத் தருகிறது.

"புதிய மாநிலங்கள் உருவான பின்னர் இதை சென்னை அரசாங்கம் செய்யுமென எதிர் பார்க்கிறேன்.

"கூட்டு நீதிமன்றங்கள் அமைப்பதையும், கூட்டுக் கவர்னர்களை மாநிலங்களுக்கு நியமிப்பதையும் நான் எதிர்க்கிறேன்."

விபரீதப் பேச்சு!

சென்னை, செப். 26—

முதன் முதல் நாட்டில் விடுதலைக்காகப் பாடுபட்ட கட்டபொம்மன் 'வெறும் கொள்ளைக்காரன்' 'திருடன்' என்று, புதுக்கோட்டை உறுப்பினர் சட்டசபையில் குறிப்பிடுகையில், அமைச்சர் இராமநாதபுரம் இராசா 'நான் சரித்திரத்தை ஆராய்ச்சி செய்ததில்லை; உறுப்பினர் சொல்வதை அவரேதான் விளக்கவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

சர்க்கார் சகித்துக் கொள்ள முடியாதாம்!

எந்த முயற்சியையும் தடுப்பதற்கு உறுதி கொண்டுவிட்டனராம்!

சென்னை, செப். 26—

"தேசியக் கொடியை எரிப்பதற்குத் தூண்டுவதையோ, அவமதிப்பதையோ சர்க்கார் சகித்துக் கொள்ள முடியாது; கொடியை அவமதிக்கச் செய்யும் எந்த முயற்சியையும் தடுப்பதற்குச் சர்க்கார் உறுதி கொண்டிருக்கின்றனர்; அவசியமானால் அதற்காகத் தனிச் சட்டமும் கொண்டுவருவர்"

என்று, சட்டசபையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் இராமமூர்த்தி, 'தேசியக் கொடியை அவமதிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை; தேசியக் கொடியை எரிப்பது சட்டப்படி குற்றமல்ல; ஆகவே, அதை திட்டவட்டமாகக் குற்றமாக்கும் சட்டமியற்றினால் நல்லதல்லவா?' என்று கேட்டார்.

இக்கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், 'இதற்குள் அவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறேன்; இனி மேல் தேசியக் கொடியை எரிக்கும் அல்லது அவமதிக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள்' என்று நினைக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அர்த்தமற்றதாம்! அனாவசியமானதாம்!

வடக்கு எல்லைப் போராட்டம் பற்றி அமைச்சர்

சென்னை, செப். 26—

"சித்தூர் தமிழர்களைக் கொண்டு நடத்தப்படும் போராட்டம் அர்த்தமற்றது; அனாவசியமானது. அதனால் சர்க்காருக்கு வீண் தர்மசங்கடமே ஏற்படுகிறது.

"இந்த எல்லைத் தகராறைத் தனித்த முறையில் கவனித்து, அவசரமாகத் தீர்க்கவேண்டியதன் அவசியத்தை சென்னை சர்க்காரும் உணர்ந்திருக்கின்றனர்; மத்திய சர்க்காரையும் வற்புறுத்தியிருக்கிறோம்; ஆகவே, சென்னை சர்க்காருக்குத் தர்மசங்கடத்தை விளைவிக்கும் இந்தக் கிளர்ச்சியைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று, சட்டசபையில், சர்க்கார் கட்சித் தலைவர் சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

சென்னையில் மவுன ஊர்வலம்:

கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

★

30—9—56 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நேப்பியர் பார்க்கிலிருந்து புறப்படும் மௌன ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள், தங்கள் சட்டையில், சிறிய அளவில் கருப்புச் சின்னம் அணிந்து வருவதற்கான ஏற்பாட்டினை ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் அன்புகூர்ந்து செய்ய வேண்டுவதுடன், ஊர்வலம் அமைதியாக நடைபெறவும் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குறைந்த பட்ச சம்பளம்

★

சென்னை, செப் 27—

சென்னை நகரசபை தொழிலாளர்கள் 6 ஆயிரம்பேர் நேற்று அமைதியாக ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

குறைந்தபட்ச சம்பளம் 30 ரூபாயாவது வேண்டுமென்று கேட்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

சென்னை, செப். 27—

"குறைந்தபட்ச சம்பளம் (மாதம் ரூ. 1,500) வாங்கினாலும், எங்களுடைய (மந்திரிகளின்) உயர்ந்த அந்தஸ்தை காப்பாற்றிக் கொண்டு மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக விளங்குகிறோம்"

என்று மேல் (சட்ட) சபையில் மந்திரி சுப்பிரமணியம் பெருமையாகக் கூறினார்.

வடக்கெல்லை மீட்பு கிளர்ச்சி

தோழர் ஜி. உமாபதி உட்பட 105 பேர் கைது

சென்னை, செப். 27—

வடக்கெல்லை மீட்புக்காகத் தமிழரசுக் கழகத்தவர் துவங்கியுள்ள மறியல் கிளர்ச்சி, இன்று நான்காம் நாளும் நடைபெற்றிருக்கிறது.

தோழர் ஜி. உமாபதி உட்பட மொத்தம் 105 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இன்று மறியலில் ஈடுபட்டவர்கள், நான்கு பிரிவினராகக் கிளர்ச்சி செய்தனர்.

திருத்தணித் தோழர் ஏ. முனுசாமி தலைமையில், முதல் பிரிவாக 25 பேர்கள் மறியல் செய்தனர்; அவர்கள் கைதானதும், இரண்டாம் — மூன்றாம் பிரிவுகளுக்குத் தோழர்கள் புத்தூர் அழகேச (முதலியார்), அம்மையனபுத்தூர் பஞ்சாயத்துத் துணைத் தலைவர் ஈ. எல். துரைசாமி ஆகியோர் தலைமை தாங்கி மறியலை நடத்தினர். மூன்று பிரிவினரும் கைதானதும், நான்காவது பிரிவிற்குத் தோழர் ஜி. உமாபதி தலைமை ஏற்றுக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்; அவரும், உடனிருந்த 30 தோழர்களும் கைதாகியுள்ளனர். மொத்தம் இன்று 105 தோழர்கள் சிறைப்பட்டிருக்கின்றனர்.

இன்றைய மறியல் கிளர்ச்சி அமைதியுடன் நடைபெற தமிழரசுக் கழகப் பிரமுகர் நீடாமங்கலம் சந்தானம் பொறுப்பேற்றுப் பணியாற்றியிருக்கிறார். இந்தத் தகவல்களை தமிழரசுக் கழகத் தோழர் கணபதி அறிவிக்கிறார்.

இனி அரசாங்கமே எடுத்து நடத்துமாம்!

பெங்களூர், செப். 23—

இதுவரை தனிப்பட்ட முதலாளிகளால் நடத்தப்பட்ட பெங்களூர் பஸ் கம்பெனியை மைசூர் மாநில அரசாங்கம் ஏற்று நடத்த ஒரு மசோதா சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. மேற்படி கம்பெனிக்கு நஷ்டஈடாக ரூ. 1,32,000 அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கே. வி. கே. சாமி பிரிவு

தூத்துக்குடியில் அனுதாபக் கூட்டம்

★

30-9-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு

வ. உ. சி. திடலில்

★

அண்ணா

துணைப்பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

ஆர். எஸ். பாண்டியன்

மற்றும் பலர் பேசுவர்

கே. வி. கே. சாமி படுகொலை

சென்னையில் 30-9-56 ஞாயிறன்று அனுதாபக் கூட்டம்—ஊர்வலம்

★

மௌன ஊர்வலம்:

மாலை 3-மணிக்கு

நேப்பியர் பார்க்கிலிருந்து

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில் புறப்பட்டு, சிந்தாதிரிப்பேட்டை—அருணாசல நாய்க்கன் தெரு, அய்யாமுதலி தெரு ஆகியவைகளின் வழியாக பூந்த மல்லி ஐரோடு, சென்ட்ரல் ஸ்டேஷன், ராட்டன் பசார், சுபாஷ்சந்திர போஸ்ரோடு, பிராட்வே, மணிகார் சவுல்ட்ரி ரோடு, ஜாண்ட்ர பிள்ளையார் கோயில் தெரு, இராமானுசய்யர் தெரு, திருவொற்றியூர் ஐரோடு, சிமெட்ரி ரோடு வழியாகச் செல்லும்.

மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி

அணிவகுத்து வருவர்

★

மாலை 6-மணிக்கு

வண்ணை—கல்லறைத் திடலில்

அனுதாபக் கூட்டம்

பொதுச்செயலாளர் அவர்களும், மற்றும் பல தோழர்களும் பேசுவர்

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

கழகக் கூட்டம்

★

சென்னை — மீர்சாகிப் பேட்டை:

இராமாராவ் தோட்டத்தில்

28—9—56, மாலை 6 மணிக்கு

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

டி. வி. நாராயணசாமி

மு. அரங்கநாதன்

★

சென்னை — பெரியமெட்டு:

பேரக்ஸ் ரோடு

29—9—56 மாலை 6 மணிக்கு

தி. மு. கழக 2-வது ஆண்டு விழா

தலைவர்: ஏ. கணேசன்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

சத்தியவாணி-முத்து

★

ஆத்தூர்:

சந்தைப்பேட்டைத் திடலில்

29—9—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஜி. பி. சோமசுந்தரம்

பேசுவோர்:

எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.

எம். குப்புசாமி

பி. எம். ரெங்கசாமி

ஏ. ஆனைமுத்து

★

போடிநாயக்கனூர்:

29—9—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

எம். எஸ். இராமசாமி

நெடுஞ்சேரலாதன்

★

கண்டியூர்:

தி. மு. கழகத் துவக்கவிழா

28—9—56 காலை 10 மணிக்கு

தலைவர்: என். கிட்டப்பா

பேசுவோர்:

க. அன்பழகன்

பொ. தருமன், கோ. சி. மணி

★

குத்தாலம்:

நகரப் பூங்காவில்

28—9—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: வி. இராமதாஸ்

பேசுவோர்:

க. அன்பழகன்

என். கிட்டப்பா

பொ. தருமன், கோ. சி. மணி

மாயூரம்:

திருவிழந்தூர் கடை வீதியில்

29—9—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: கா. மு. ஷெரீப்

பேசுபவர்: டி. கே. சீனுவாசன்

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

செப். 28: காலை—கண்டியூர்
மாலை—குத்தாலம்
29: சத்தியமங்கலம்
30: திருப்பூர்
அக். 1: தாராபுரம்
3 மணி—உயர்நிலைப் பள்ளி
6 மணி—பொதுக்கூட்டம்

சென்னை மாநில நெடுஞ்சாலை போக்கு - வரத்து தொழிலாளர் சங்கம்

29, 30—9—56 ஆகிய இரு நாட்களிலும், திருச்சி டவுன் ஹாலில் மேற்படி சங்கத்தின் முதல் மாநாடு நடைபெறும். மாநில பொது மராமத்து அமைச்சர் சண்முக இராசேசுவர சேதுபதி மாநாட்டைத் திறந்துவைப்பார்.

கலந்தாலோசிக்கின்றனர்!

சென்னை, செப். 25—

கோவை மாவட்டத்தில் உள்ள பரம்பிக்குளம் மேல் அலியாறு திட்டத்தை உருவாக்க சென்னை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடனும்—திரு-கொச்சி அரசாங்கத்துடனும் கலந்து ஆலோசித்து வருவதாக மேல் சபையில் விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

கோவை, செப். 26—

இப்போது பம்பாய் கவர்னராக உள்ள மெகதாப், ஒரிசாவுக்குச் சென்றதும், பம்பாய் கவர்னர் பதவியை ஏற்பதற்கு சென்னை கவர்னர் ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ